



அன்பான அதிபர்களே, ஆசிரியர்களே,
பெற்றோர்களே, மாணவமணிகளே,

கடந்த 06.04.2020 அன்று ஆரம்பிக்கப்பட்ட கொவிட்- 19 கற்றல் செயற்பாடு இன்றுடன் நிறைவு பெறுகின்றது என்பதனை தங்களுக்கு அறியத் தருகின்றேன். இவ்வளவு நாட்களும் இச் செயற்பாட்டிற்காக ஒத்துழைத்த அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். வினாத்தாள் செவ்வை பார்ப்பதில் நானே தட்டச்சுச் செய்ததால் சில வினாத்தாள்களில் பிழைகள் ஏற்பட்டதுமுண்டு. அவற்றைச் சீர் செய்து தங்களது பரீட்சைக்கு வெற்றிகரமாகத் தயார் செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இம் முறை பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் தமது பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று பரீட்சையில் சித்தியடைய எனது அன்பான வாழ்த்துக்களுடன் , இறையாசியையும் வேண்டி நிற்கின்றேன்.

இதற்கும் மேலாக இனி வரும் வாரங்களில் வாரந்தோறும் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நிகழ் நிலைப் பரீட்சையாக நடாத்துவதற்குத் தீர்மானித்துள்ளேன் . இதறகும் தங்களது மேலான ஒத்துழைப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கின்றேன்.

பாடசாலைமற்றும் தனியார் கல்விநிலையங்களுக்காக வெளியிடப்பட்டுவந்த " புலமைக்கதிர் " மாதிரிவினாத்தாள் , வினாத்தாள் - 03 இருந்து தொடர்ச்சியாக அச்சுப் பிரதியாக வெளயீடு செய்யப்படவுள்ளது. அதற்கான விண்ணப்பங்களையும் வினாப் பத்திரங்களையும் பெற்றவர்கள் இனி வரும் நாட்களில் தொடர்ச்சியாகப் பெற்றுக் கொள்ளமுடியும் என்பதனை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அன்புடன் ,
ஆசிரியர்.



புலமைக்கதிர் 5

புலமைப் பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்

மாணவர்களை பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப்பரீட்சை வினாத்தாள்-

13 2020 **பத்திரம் II**

பெயர் :.....

1மணி 15 நிமிடம்

01. பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்குப் பெருத்தமான விடைகளைத் தருக?

மனித குலத்தின் தொன்மையான கலைப்படைப்புக்களுள் ஓவியக்கலையும் ஒன்றாகும். பாறைச் சுவரோவியம் வரையும் பழக்கம் முதன் முதலில் எப்போது தோன்றியது என்பதற்கு சான்று கூற முடியாதுள்ளது. எனினும் பழங்கால மக்கள் குகைகளில் ஓவியங்களை வரைந்துள்ளனர் என்பதை வரலாற்று ஆய்வுகள் தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

1. இப்பந்தி கூறும் கலைப்படைப்பு எது? .....
2. "தோன்றியது" என்பதன் எதிர்ச்சொல் யாது? .....
3. "தொன்மை" என்பதன் ஒத்த சொல் பந்தியில் இருந்து தெரிந்து எழுதுக.?

.....

4. பந்தியிலுள்ள அடைமொழிச் சொல் ஒன்றை எழுதுக? .....
5. பந்தியிலுள்ள இணை மொழியைத் தருக? .....
6. இப்பந்தியிலுள்ள படர்க்கை பன்மை அ∴றிணை பலவின்பால் வினைமுற்று சொல்லொன்றை எழுதுக? .....

02. பின்வரும் சொற்களில் உயிர்க்குறிகளின் பெயர்களை எழுதுக.

1. நுளம்பு

.....

2. சூரியன்

.....

3. புத்தகம்

.....

03. அடைப்புக்குள் உள்ள சொற்களிலே சரியாக எழுத்துக் கூட்டப்பட்ட சொல்லைத் தெரிவு செய்து கோடிடுக.

சிறுவர்கள் ..... (கடற்கறை/ கடற்கரை) மணலில் வீடு கட்டி விளையாடினர்.

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

04. பின்வரும் இடைவெளிகளைப் பூர்த்தி செய்க?

வானம் பாடி மயிலின் கூத்தை

வாழ்த்திப் பாட்டுப் பாடுது

வண்ணக் .....

மயிலின் கூத்தைப் .....

05. பின்வரும் சொற்களின் பெண்பாற் சொல்லை எழுதுக.

1. சிநேகிதன் .....
2. தமயன் .....

06. மரபுத் தொடரின் கருத்தைத்தருக?

1. வாய்காட்டுதல் .....
2. இட்டுக்கட்டுதல் .....

07. உள்ளீடுகளின் பெயர்களைத் தருக?

1. நெல்லின் உள்ளீடு .....
2. வேம்பின் வித்து .....

08. பின்வரும் உவமைத் தொடர்கள் உணர்த்தும் கருத்துக்களை எழுதுக?

1. நகமும் சதையும் போல.....
2. கலங்கரை விளக்கம் போல.....

09. சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்குக?


1. பாடசாலையில்/ வளங்கள்/ உண்டு/ எங்கள்/ நிறைய


.....

2. எனக்கு/ விருப்பம்/ சின்னச்சின்ன/ நனைய/ மழைத்துளிகளில்/ மிகவும்

.....

10. பின்வரும் படங்களுக்கு ஆங்கிலச் சொற்களை எழுதுக?





11. பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்தின் கருத்தையும் ஆங்கில எழுத்துக்களில் எழுதுக?

1. நான் வீட்டிற்குப் போகலாமா? .....
2. வெளியே செல்ல வேண்டாம்? .....

12. பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தை தமிழில் தருக?

1. I am drinking water .....
2. where are you going? .....

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

www.ikeou.lk

13. பின்வரும் தமிழ் சொற்களுக்குரிய சிங்களக் கருத்தைத் தமிழில் எழுதுக?

1. பதினைந்து ..... 2. கடிகாரம் .....

14. தரப்பட்டுள்ள சிங்கள வாக்கியத்திற்குரிய தமிழ் உச்சரிப்பை தமிழில் எழுதுக?

அப்பே பாசல?

.....

விடைகளைக் கணித்து எழுதுக.


15. 1. 8128 என்பதைச் சொற்களில் எழுதுக.

.....

2. அவ் எண்ணை இடப்பெறுமான அடிப்படையில் விரித்து எழுதுக.

8128 – .....+ ..... + ... + ...

16. 1. உருவில் நிழற்றப்பட்ட பகுதியை பின்னமாகத் தருக?



.....


2. நிழற்றப்படாத பகுதியை தசமத்தில் தருக?

.....

17. 848, 1022, 884, 1202 ஆகிய எண்களை ஏறுவரிசையில் எழுதுக.

..... , ... , ... , ...

18. தரப்பட்டுள்ள வரிப் படத்தைக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக?



1. A யிலிருந்து B ஊடாக D வரையான தூரம் 150 மீற்றர் எனின் D யிலிருந்து E வயைான தூரம் யாது?

.....


2. A யிலிருந்து C வரை பயணிக்க மிக அதிகமான தூரத்தின் பயணப்பாதையின் ஆங்கில எழுத்துக்களை எழுதுக?

.....

19. பாத்திரமொன்று 5l கொள்ளும் அதில் தற்போது 2l 500ml நீர் உள்ளது. எனின் பாத்திரத்தை நிரப்ப இன்னும் எவ்வளவு நீர் தேவை?

.....


20. தரப்பட்டுள்ள பென்சிலின் நீளம் யாது?



.....

21. பின்வரும் கடிகார முகத்தில் தரப்பட்டுள்ள நேரத்தை குறிக்க.

இரவு 9 மணி கடந்து 50 நிமிடங்கள்



www.lkedu.lk

22. பாடசாலையில் உள்ள மொத்த மாணவர்கள் தொகை 435 ஆகும். பெண் மாணவர்களின் எண்ணிக்கை 213 ஆகும். ஆரம்பக் கல்விப் பிரிவில் கல்வி கற்கும் மாணவர் தொகை 192 ஆகும். அதன்படி, பாடசாலையில் உள்ள ஆண் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது ?

.....

23. விழா ஒன்றிற்கு வருகை தந்த பார்வையாளர்கள் தொகை 957 ஆகும். அதில் பெரியோர்கள் தொகை 784 எனின் சிறியவர்களது எண்ணிக்கை யாது?

.....

24. இடங்களுக்கிடையிலான தூரம் அருகே தரப்பட்டுள்ளது. இதன்படி திருகோணமலையில் இருந்து கல்முனை வரையான தூரம் யாது?

	அக்கரைப்பற்று	கல்முனை
மட்டக்களப்பு	59	132
திருகோணமலை	104	177
	45	

.....

25. ஒரு பாடசாலையில் 957 பயிற்சிக் கொப்பிகள் மாணவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன. ஒருவருக்கு 3 கொப்பிகள் கிடைத்ததாயின் பாடசாலையில் இருந்த மாணவர்கள் தொகை எவ்வளவு ?


.....

26. 9kg சீனி இடக் கூடிய பையொன்றில் 3kg 475g சீனியுள்ளது. பையை நிரப்புவதற்கு இன்னும் தேவையான சீனியின் நிறை யாது ?

.....

27. விடுமுறை காலத்தில் வீட்டில் வளர்க்கப்பட்ட பூச் செடிகள் கீழே தரப்பட்டுள்ளது. இதன்படி

1. அலரிச் செடியை வளர்ப்போர் ரோஸா செடியை வளர்ப்போரை விட இரண்டு மடங்கு எனின் அதனை வரைபில் நிழற்றுக ?



28. பொதியொன்றின் நிறை 900 g ஆகும். அவ்வாறான 7 பொதிகளின் நிறை யாது ?

.....

29. 1kg கடலை – 400.00 எனின் 250 g கடலையின் விலை யாது?

.....

* பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.




30. j z þ y ; f haf Ff k ; j ht uk ; v J ?

1. எலுமிச்சை 2. லொவி 3. விளிம்பி

31. உடலுக்குத் தேவையான வளியைத் தனது தோலிலிருந்து பெற்றுக்கொள்ளும் பிராணி

1. மண்புழு 2. ஓணான் 3. தவளை

32. சூரிய நமஸ்காரத்தின் 5வது படிமுறை யாது?

1.  2.  3. 

33. அகழ்வுக் கைத்தொழிலில் மாணிக்கக்கல் தாதுகள் அகழும் கூடையின் பெயர்?

1. மடி 2. நாம்புவ 3. பாதட்டிய

34 வீதியொன்றைக் கடக்கும் போது முதலில் பார்க்க வேண்டிய பக்கம் எது?

1. இடம் 2. முன்னால் 3. வலம்

35. தனது உடலை எந்நேரமும் சுத்தமாக வைத்திருக்கும் பிராணி எது?

1. ஆடு 2. பூனை 3. நாய்

36. "வலது பக்கம் திரும்புக" என்பதைக் காட்டும் குறியீடு எது?

 2.  3. 

37. இரண்டு நிறங்களை சேர்ப்பதன் மூலம் உருவாக்கக்கூடிய நிறம் எது?

1. நீலம் 2.மஞ்சள் 3. பச்சை

38. உடலில் இருந்து அதிகசக்தி விரையமாகும் விளையாட்டு எது?

1. உதைபந்து 2. பூப்பந்து 3. கரம்

39. பிளாஸ்ரிக் நீர் போத்தலை கொள்வனவு செய்யும் போது காணப்பட முடியாத குறியீடு பின்வருவனவற்றுள் எது?

1.  2.  3. 

40 சந்திரவட்டக்கல்லில் செதுக்கப்பட்டுள்ள அடையாளங்கள் இடம் பெறாதது?

1. மிருகங்கள் 2. அன்னப்பட்சி 3. நெற்கதிர்

41. தேசப்பட மொன்றில் 'A' தரப் பெருவீதியைக் குறித்துக் காட்டப் பயன்படுத்தப்படும் நிறம்?


1. மஞ்சள் 2. கறுப்பு 3. சிவப்பு

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---

42. பின்வருவனவற்றுள் உடன்பாடான (நேர்) நடத்தை மாற்றம் எது?

1. காலை வேளை பல்துலக்காது தேநீர் குடித்தல்
2. காலை எழுந்தவுடன் படுக்கை அறையை ஒழுங்குபடுத்தல்
3. கண்ட கண்ட இடத்தில் துப்புதல்

43. இவ் உபகரணத்தின் பயன்பாடு



1. நிழலை அவதானித்தல்
2. நீரைக் கொதிக்க வைத்தல்
3. நிலவை அவதானித்தல்

44. பச்சை நிறமுடையது ஆனால் பூச்சி வகையில் அடங்காதது எது?

1. வெட்டுக்கிளி 2. கும்பிடுபூச்சி 3. கிளி

45. இலங்கைக்கு கிழக்கே அமைந்துள்ள நாடு எது?

1. அவுஸ்ரேலியா 2.இந்தியா 3. மலேசியா

46. தரப்பட்டுள்ள தாவரங்களில் விலங்குகளில் தங்கியிருக்கும் தாவர வகை பெயரைக் குறிப்பிடுக.

1. துளசி 2. குப்பைமேனி 3. கெண்டித்தாவரம்

47. பதிவுத்தபால் ஒன்றை சாதாரண குடிமகன் ஒருவர் அனுப்ப ஒட்டப்பட வேண்டிய முத்திரையின் பெறுமதி யாது?

1. 15.00 2. 40.00 3. 25.00

48. உணவு உண்ணும் போது கடைப்பிடிக்க வேண்டிய நற்பழக்கவழக்கம் அல்லாதது?

1. போதுமான உணவை மட்டும் பகிர்ந்து எடுத்தல்
2. வாயில் இருந்து சத்தம் எழாதவாறு உண்ணுதல்
3. உள்ளங்கையால் பிசைந்து பிசைந்து உண்ணுதல்

49. தாய்ப்பூனை தனது குட்டியை வாயால் கௌவிச் செல்லும் குட்டியின் பகுதி யாது?

1. காதுகளை 2. கழுத்தை 3. பாதங்களை

50. வயலின் களத்தில் "குல்லம்" என அழைக்கப்படுவது?

1. சுளகு 2. அரிவாள் 3. வைக்கோல்

51. மீனவர் சிறு மீன்களைப் பிடிப்பதற்குப் பயன்படுத்தப்படும் கூடை வடிவில் அமைந்த உபகரணத்துக்கு வழங்கப்படும் பெயர் யாது?

1. நாம்புவ 2. கரவலை 3. கரப்பு

52. சரித்திரப் புகழ்மிக்க "சிகிரியா" நகருக்குஅண்மையில் உள்ள வர்த்தக நகரம் எது?

1. தம்புள்ள 2. பொலநறுவை 3. அனுராதபுரம்

53. மிக வேகமாக அழிந்து (காய்ந்து) போகக்கூடிய திரவம் எது?

1. பெற்றோல் 2. டீசல் 3. நீர்

54. கொழும்பு முகத்துவாரப் பிரதேசக் கடலில் விழுவது?

1. மகாவலிகங்கை 2. களுகங்கை 3. களனிகங்கை

55. மரங்களைச் செதுக்கப் பயன்படுத்தத்தக்க மிக உகந்த உபகரணம்

1. உளி 2.துறப்பணம் 3. கத்தரிக்கோல்

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---


56. அனுராதபுரத்திலிருந்து யாழ்ப்பாணம் வரை அமைந்துள்ள புகையிரதப்பாதையில் இருக்கும் ஒரு புகையிரத நிலையம்

1. குருநாகல் 2. மாகோ 3. நாவற்குழி

57. நுரைச்சோலை அனல்மின் நிலையம் பொறிக்கப்பட்டுள்ள தாள் காசு எது?

1. 

2. 

3. 

58. தொடர்பாடலுக்குப் பயன்படுத்தப்படும் அச்சு ஊடகம் எது?

1. ஒலிபெருக்கி 2. வானொலி 3. பத்திரிகை

59. நில நடுக்கத்தின் போது ஒருவர் தன்னைப் பாதுகாப்பதற்கு உடனடியாகச் செய்ய வேண்டியது?

1. இருக்கும் இடத்திலேயே இருத்தல்
2. மரத்திற்கு கீழே இருத்தல்
3. வெளியான இடத்திற்குச் செல்லுதல்

60. கீழேயுள்ள காட்சிப் படத்தைக் கொண்டு நிகழ்காலத்தில் மூன்று வாக்கியங்கள் எழுதுக?



1. .....
.....

2. .....
.....

3. .....
.....

திரு. க. சந்திரகுமார். (0778888670) --- ஆசிரிய ஆலோசகர், வவுனியா வடக்கு. ---